Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கலைஞானம்

ACC. NO.
46361

"தமிழ் வேத நாவலர்"

"வைத்தியமணி"

சற்குரு. சித.வே. ஷண்முகநாத பிள்ளை
முத்தமிழ் வேதத் திருச்சபை
தேவகோட்டை

Koviloor Digital Library

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கலைஞானம்

இந்நூலாசிரியர்

"தமிழ் வேத நாவலர்"

முத்தமிழ் வேதத் திருச்சபை

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை.

இஃது

கனடா டாக்டர் **சித. ஏகப்பன் செட்டியார்** அவர்கள்

ஆர்வத்தினாலும் பேரன்பினாலும்

தேவகோட்டை

ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸில் பதிப்பிக்கப் பெற்றது.

வெளியீடு

முத்தமிழ் வேதத் திருச்சபை

முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளி

பெரி.மு. தெரு, தேவகோட்டை - 630 302.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 46361

Koviloor Digital Library

சிவமயம்

அரிஓம் நன்ருக குருவாழ்க குருவே துணை

நூல் பெயர் : கலைஞானம்

முதற்பதிப்பு : தாரண ஆண்டு (2004) ஆவணி மாதம்

நூலாசிரியர் : சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை

பக்கங்கள் : 32 (௩௰௨) பக்கங்கள்

வெளியீடு : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை

தாள் : 16 கிலோ மாப்லித்தோ

நூலின் அளவு : டெமி 1/8 சைஸ்

விலை : ரூ. 21 (உ௰க)

எழுத்து : 12 புள்ளி

உரிமை : முத்தமிழ் வேதத் திருச்சபையோர் தேவகோட்டை

பைண்டிங் : வெல் பவுண்டு பைண்டிங்

கிடைக்குமிடம் : **Dr. SV. முருகேஷ்** R.I.M.P. A.M.I.H.
முத்தமிழ் வேதத் திருச்சபைத் தலைவர்
சித்த மருத்துவம்
கிணற்றுநீர் நிபுணர், புதுக்கோட்டை

நலந்தா புத்தகக் கடை
வடக்கு வல்லம்பர் தெரு. காரைக்குடி - 630 001.
போன் : 95+4565+234807

இராம. ஆதிரெத்தினம்
இணைச்செயலாளர். முத்தமிழ் வேதத் திருச்சபை
19, ரெகுநாதபுரம் மேற்கு. தேவகோட்டை.
போன் : 95+4561+270113

கணினி & அச்சு அமைப்பு : **ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ்**
தேவகோட்டை - 630 302.
போன் : 95+4561+273347, 261361
email : swamirajbal@hotmail.com

Koviloor Digital Library

5/1

உ

சிவமயம்

இந்நூலாசிரியர்

"தமிழ் வேத நாவலர்" "வைத்தியமணி"

சற்குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை

முத்தமிழ் வேதத் திருச்சபை

தேவகோட்டை.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

கலை ஞானம்

முன்னுரை

எம் ஞானத் தெளிவு குருவின் திருவடி என் உச்சி மேற்கொண்டு கலை ஞான நூலிற்கு முன்னுரை எழுதுவோமாக.

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானத்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்

என்று பெரியபுராணத்தில் திருஞான சம்பந்தரை சேக்கிழார் சுவாமிகள் நமக்கு உணர்த்தியருளியிருக்கின்றார். ஏன் திருஞானசம்பந்ர் தவமுதல்வர் என்பதற்கு கந்தபுராணத்தில் உள்ள ஆறு சங்கிதைகளில் சிவபெருமான் அருளிய சங்கிதை சங்கர சங்கிதை என்று பெயர். அரன் (சிவபெருமான்) சங்கர சங்கிதையை உமாதேவியாருக்கு உணர்த்தியருளினர். அப்போது தாய்மடியில் முருகக்கடவுள் வீற்றிருந்து கொண்டு சங்கர சங்கிதையை கேட்டு அகமகிழ்ந்து அவர் தம் மெய்யன்பராகிய அகத்திய முனிவருக்கு உணர்த்தி அருளினர். அன்று முதல் சங்கர சங்கிதை அகத்திய சங்கிதை என்று பெயர் பெற்றது.

அகத்திய மாமுனிவரிடம் சென்று வியாதர், நாரதர், சனகர், சனந்தனர், சனுதனர், சனற்குமாரர், கௌதமர், பராசரர், வாமதேவர், வான்மீகி, வசிட்டர், சுகர் முதலான முனிவர்கள் வணங்கி "மூர்த்தி, தலம், தீர்த்தம்" என்ற மூன்றில் மூன்றிலும் சிறந்து விளங்கும் சிவஸ்தலம் எது என வேண்ட அதற்கு அகத்திய சங்கிதையில் நீங்கள் விரும்பும் மூவகை சிறப்பு வாய்ந்ததும், அருந்தவஞ் செய்து பெறத்தக்க வீடுபேற்றை அளிக்க வல்லதும், சிவபெருமான் அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் விளையாடியதும், பூலோக சிவலோகம் என்று அழைக்கப்படுவதுமாகிய துவாத சாந்தத்தலம் என்னும் திருஆலவாயாகிய மதுரையம்பதி தான் முதலிடம் என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்ருர். பூலோக சிவலோகம் என்று போற்றிப் புகழக் கூடிய அளவிற்கு உள்ள சிறந்த சூட்சமங்களை எம் ஞானத் தெளிவு குரு சித.வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள் பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாற் புராணத்தின் மூலம்

Koviloor Digital Library

உ
சிவமயம்

"கலை ஞானம்" என்ற நூலாக்கி அந்நூலிற் இறைவன் விளையாடிய அறுபத்து நான்கு திருவிளையாடலுக்குரிய கலைகள் நட்சத்திரங்களுக்கு நாற்பத்துமூன்று கலைகள் என்றும் இராசி பன்னிரண்டுக்கு பனிரெண்டு கலைகள் என்றும் கோள் ஒன்பதிற்கு ஒன்பது கலைகள் என்றும் ஆக அறுபத்து நான்கு திருவிளையாடல் ஆடி உலகை உய்ய வைத்துள்ளத் திருத்தலம் என்பதை எடுத்துக் காட்டியருளுகிறார். ஞானியர்கள் போற்றி வழிபடும் நாற்பத்து முக்கோணத்தின் தலைவியாகிய தேவி ஆட்சி புரிந்த இடம். இறைவன் விளையாடிய திருவிளையாட்டெல்லாம் இறைவி மீனாட்சியின் அருள்நோக்கே என்று எடுத்து நமக்கு உணர்த்தியருளுகிறார்.

திருவிளையாடற் புராணத்தில் பரஞ்சோதி முனிவர் அருளியது.

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழேனை
மண்ணிடைச்சில விலக்கணவரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.

தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்தது முதலை
யுண்ட பாலனை யழைத்தது மெலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததுங் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச்சொற்களோ சாற்றீர்.

நம் இறைவன் கழகமோடு இருந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழை நாம் கற்று தெளியாமல், புராணங்கள், இதிகாசங்கள், சாத்திரங்கள், தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற உயிர்க்கலை வளர்க்கும் நூல்களை வாழ்வில் வாசிக்காமல் முன்னோர்கள் ஆக்கித் தந்த அருட்பெருஞ்செல்வங்களை நமக்காக ஆக்கி அருளைத் தேடாமல் இருப்பது நியாயமா ? தர்மமா ?

நம் முன்னோர்கள் ஞானியர்கள் ஆக்கித் தந்த தமிழ் எழுத்துக்களில் உள்ள சூட்சமத்தை உணராமல், தமிழ் எழுத்தை மாற்றுவதற்கு மட்டும் எங்கிருந்து வந்தது உரிமை. மாற்றியவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

Koviloor Digital Library

உ

சிவமயம்

அகரம் முதலாய் ஔகான் ஈறாய்
வருந் தொடர் வைப்பின் வகுத்தவுருவ
நெறிவரன் முறைமை நிலைமையை அகத்தியம்
நூலிற் அறியவில்லையோ !

உயிர்க்கலை பன்னிரண்டொன்றின் உருவவமைவு உண்டு அவற்றின் ஒலியமைதியும் உண்டு. இங்கு எடுத்துக்காட்டி விளக்குகிறோம்.

'அ' உயிரெழுத் தொலியை யொலிப்பதே ஆவாம்.

'இ' நாத வெழுத்தொலி நவில்வதே ஈயாம்.

'உ' விந்தெழுத் தொலியை விளம்புவதூஉளன்.

'எ' இனன்கலை யெழுத்தை இயம்புவ தேறு.

'ஐ' இனன்கலைச் சார்பெழுத் திசைப்பது சில்ஐ.

'ஒ' இடைகலை எழுத்தொலி எழுப்புவ தோநாய்

'ஔ' இடைகலைச் சார்பெழுத் திசைப்பது ஔவா.

'ஃ' எழுத்தனைத் திற்கும் இடமாய் வெளிவளி ஒலியாய்ச் சுழிமுனை யுருவங் கொண்டு அஃகென வொலிக்கும் அரவாம் அஃகி.

"காணும் வண்ணம் காட்டிய விதற்கு
முதலாய் நின்ற வதுகலை யாதலால்
கலையி னிடத்து நிலைபெறக் காணும்
வாயு மனம்உயிர் ஆய மூன்றென
அகத்திய எழுத்தும் அதனுருப் பிராணியும்
அதன்ஒலிப் பிராணியும் ஆயது கலாந்தம்".

சூட்சமத்தை அறியாத கல்வியாளர்கள் 'கலை' என்ற சொல்லின் அமைதியையும், அழகையும் அதன் ஆக்கத்தையும் அறிய முடியாமல் எளிமையாக "லை" என்ற எழுத்தை "லை" என மாற்றினால் பெரிய சிந்தனைவாதி என உலகம் நினைக்கும் என நினைத்து ஏமாந்து போவார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தின் உள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

Koviloor Digital Library

"கலை" என்ற சொல் சூட்சமம் :

'க' என்ற எழுத்தில் முட்டை வடிவமான மூலாதாரம் சதுரவடிவமான சுகவதிஷ்டானம் இரண்டும் இணைந்த உருவம் 'க'. மூல எழுத்தான 'க'வில் இருந்து வாசி எழும்பி சஞ்சாரம் அண்ட பிண்டத்தில் நடைபெறுவதால் அண்டத்தில் இருந்து பிண்டத்தில் வாசி சஞ்சாரம் செய்வதை 'லை' குறிக்கும். அப்பொழுது தான் உண்மைநிலையான கலை பிறக்கும். 'க' என்ற எழுத்தருகில் இந்த 'லை' இருக்கும் பொழுது அதன் அழகை ரசிக்க வேண்டாமா ? இந்த கலை ஞானம் நூல் வெளிவந்த பிறகாவது கல்வியாளர்கள் உண்மைநிலையை அறிந்து ஆவண செய்ய வேண்டும். தமிழ் எழுத்துக்களை முன்னோர் ஆக்கியது போல் பழைய நிலைக்கு மாற்ற வேண்டும். மாற்றினால் விண்ணில் இருந்து மண்ணிற்கு அதாவது தமிழ் அகமாக வைத்திருப்பதை அறிந்து செயல்பட்டால் அண்டத்தில் உள்ள தமிழ் அமிழ்தம் பிண்டத்தில் சார்ந்து நம்மை வாழ வைப்பது போல் அண்டமாகிய விண்ணில் இருந்து பிண்டமாகிய மண்ணிற்கு மழை மும்மாரி பொழியும் என்பதில் எள்ளவும் ஐயம் வேண்டாம். ஏனெனில் இறைவன் தமிழை அகமாகவே வைத்துள்ளார் என்பதை இந்நூல் "கலைஞானம்" தெளிவாக்கும். இந்த கலைஞானமான தமிழை நாடினால் தமிழ்நாடாக்கும் என்பது திண்ணம்.

மேலும் 'க' என்ற எழுத்து ஒன்று என்ற எண் மதிப்பைப் பெறும். ஏனெனில்

"முதலும் நடுவும் முடிவிலா ஈறும்
ஆன எழுத்து உ அன்றென நின்று
நாம ரூபம் ஆம் அது கடந்த
தன்மையெழுத்தாய்ச் சமைவு கொண்ட
விளக்கம் உடைத்தாம் இலக்கணம் ககரம்".

'க' என்ற எழுத்து முதலிலும். நடுவிலும். தொக்கியும். முடிவில்லாத ஈறாகவும் வரும். இந்த எழுத்துப்போல் வேறு எந்த எழுத்தும் செயல்பட முடியாது. ஆகவே தான் எண்ணில் 'ஒன்று' என்று 'க'விற்கு மதிப்பை ஞானியர்கள் ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

(உ.ம்.)

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

Koviloor Digital Library

ஆகவே நாம் அறிய வேண்டியது "கலை ஞானம்" என்ற நூல் நமக்கு கிடைத்த அருட்பெருஞ்செல்வம். இதிலிருந்து ஆயகலைகள் 64 (சுயச) என்ன என்பதையும் இந்த 64 (சுயச) கலைகளும் உயிர்க்கலையென்றும் இதை அண்டத்தில் நட்சத்திரம் இருபத்தெட்டு திதி பதினைந்து இராசி பனிரெண்டு கோள் ஒன்பதாக அமைத்து அருளியிருக்கும் அமைப்பை பிண்டத்தில் அறிந்து உடற்சக்கரமாகிய நாற்பத்து முக்கோணமும் ஆறு ஆதாரம் மும்மண்டலமுமாக இயங்க கூட்டுவித்த இறைவன் கருணையை கனிவாக எண்ணிப் பார்க்க வேண்டாமா ? கலை தான் வாழ்வின் நிலையை மாற்றக் கூடியது. கலை இல்லையேல் ஏதும் இல்லை என்பதை இந்நூல் மூலம் உணரலாம். இதையே திருமூலர்

எல்லாக் கலையு மிடைபிங் கலைநடுச்
சொல்லா நடுநாடி யூடே தொடர் மூலஞ்
செல்லா வெழுப்பிச் சிரத்துடன் சேர்தலா
னல்லோர் திருவடி நண்ணி நிற்போரே. என்கிறார்.

நம்மை சிரத்துடன் சேர வைப்பது 'லை' என்ற எழுத்து 'லை' அல்ல என்பதை நன்கு உணரலாம். உணர்ந்தவர்கள் ஞானியர்கள் ஆக்கித் தந்த தமிழ் எழுத்துக்களை வாழ்வில் பயன்படுத்தி பலனைப் பெறட்டும்.

நம் அகமானது தமிழை செம்மையாகவ்வ கொண்டது. இதன் அதி நுட்பத்தை அறிந்தால் நம் அகமானது இயக்காய வர்க்கமாக இருப்பதை அறியலாம். ஆகவே இசையிற் உருவமதைப் பெற்றவர்கள் என அறிந்து சுருதி நூல்களைக் கற்று நம் அகத்தை அறிய இந்நூல் வழி காட்டுகிறது. சுருதிப் பொருள் தான் சுகம் தரும் மருந்து, இந்த சூக்குமம் அறியார் கூற்றுவன் விருந்து என்பதும் திண்ணம்.

எம் ஞானத் தெளிவு குருவின் கருணையினால் இந்நூல் வெளி வரலாகிறது. இந்நூலையும் சிவபுண்ணிய சீல மெய்யன்பர் சிதம்பரம் செட்டியார் அவர்கள் தவப்புதல்வன் சித. ஏகப்பன் செட்டியார் அவர்கள் ஆர்வத்தினாலும் பேரன்பினாலும் சிவ புண்ணிய சீலர்களுக்கு கிடைக்க செய்ய வேணும் என்ற எண்ணத்தினாலும் கலியின் கொடுமை தீர வேணும் என்ற பேராவலினாலும் வெளியிட்டு மண்ணுலகத்திற் பிறந்த பிறவிப்பயனை அடைகிறார். எல்லாம் வல்ல இறையருளையும்

Koviloor Digital Library

குருவருளையும் பெற்று அன்னார் பரம்பரையே நீடூழி வாழ வேண்டும் என முத்தமிழ் வேதத் திருச்சபையார் வேண்டுகிறோம்.

எங்கள் நூல்கள் அனைத்தையும் ஞானியர்கள் ஆக்கித் தந்த எழுத்தின் வடிவங்களைக் கொண்டு சிறந்த முறையில் பொறுமையாக இன்முகத்தோடு போதும் என்ற பொருளை மட்டும் வாங்கிக் கொண்டு கணினி மூலம் அச்சு ஆக்கித் தரும் ஸ்ரீ பாலாஜி கிராபிக்ஸ் குடும்பத்தார் அனைவருக்கும் எங்கள் முத்தமிழ் வேதத் திருச்சபையின் நன்றி கலந்த வணக்கம். இந்நூலிற்கு முன்னுரை எழுத எமக்கு உள்ளிருந்து உணர்த்தியருளிய எம் ஞானத் தெளிவு குருவின் கருணையை எண்ணி எண்ணி இன்பம் அடைந்து மனம் கனிவாகி இனிவரும் பிறவி தோறும் முத்தமிழ் வேதத்திருச்சபையின் அடிமையாகவே வாழ வரம் தர வேண்டும் என வேண்டி நிறைவு செய்வோமாக.

இவண்

இராம. ஆதிரெத்தினம்
முத்தமிழ் வேதத் திருச்சபை
இணைச்செயலாளர்

Koviloor Digital Library

உ

சிவமயம்

அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

எம் ஞானத் தெளிவு குரு சிறுவயது முதல் இயம நியம நெறியில் நின்றதனால் திருவருள் கூட்டுவிக்க வாசிக்கலை பயின்று அக்கலையின் விளைவால் அமிர்த்தம் அருந்தி அதன் விளைவால் தன்னகத்தே தோன்றும் அகத்தீயை ஆராய்ந்து தெளிந்து அதன் மூலம் நூல்களை செய்துள்ளார்கள். அவர்கள் ஆக்கிய நூல்கள்

1. அகத்தியம்
2. உயிர்நிலைக் கலை இலக்கணம்
3. முத்திநெறி இலக்கணம்
4. கரண இலக்கணம்
5. பண்ணிலக்கணச் சூக்கம்
6. இலக்கிய இராமாயணம்
7. இரத்தினச் சுருக்க இராமாயணம்
8. திருஞானசம்பந்தர் கால நிர்ணய விளக்கம்
9. திருமூலரின் சூனிய சம்பாதனை (உரை விளக்கம்)
10. திருமுறைப் பெருநூல் விளக்கம்
11. திருமகள் திருப்பதிகம்
12. கலைஞானம்
13. இலிங்கபுராணம்
14. ஞான சரஸ்வதி பதிகம்
15. வைத்திய சாஸ்திரம்
16. திருஞானசம்பந்தர் திரு அவதாரச் சிறப்பின் விளக்கம்.
17. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த இரண்டாம் திருமுறை பொருள்விளக்கம். பூர்வ மீமாம்சை. உத்தர மீமாம்சை.

கலியுகத்தில் கருணை கூர்ந்து நம் உயிருக்கு துணையான நூல்களை தந்திருக்கிறார்கள். நம் உயிர்த்தீயை இயக்கி ஒலி மூலம் ஒளியை உண்டாக்க அதன் மூலம் முத்தி அடைய ஆக்கிய நூல்கள். முதற்பொருளாகிய இறைவனுடைய கலையின் மூலம் ஆக்கியதால் இந்நூல்களுக்கு எல்லாம் அகவுரையாகவும் சாட்சியாகவும் அவனே இருப்பதால் கலியின் கொடுமை தீர ஒவ்வொரு நூலாக வெளி வந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் மிகவும் கருணை உள்ளம் கொண்டு முத்தாத்தாள் நடுநிலைப் பள்ளியில் முத்தமிழ் வேதத் திருச்சபை நிறுவி பௌர்ணமி தோறும் திருமுறைப் பெருநூல் விளக்கமும் ஞாயிறு தோறும் இலக்கிய இராமாயணத்தையும் இயம்பி செவிக்கு பனிரெண்டு ஆண்டுகள் விருந்து படைத்தருளினார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் காட்டியருளிய நெறி வழியே 26 ஆவது ஆண்டு நிறைவை நோக்கி சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது. முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்கு சேரவாரும் செகத்தீரே என அன்போடு தெளிவு குருவின் ஆசியோடு அழைக்கின்றோம்.

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரி ஓம் நன்றுக குரு வாழ்க குருவே துணை

கலைஞானம்
காப்பு

திருநீறது வுயர்மெய்ப் பொருள்தெளி வீரிது வுண்மைக்
குருநீதியு மிதுவென்றருள் கூடற்பதியின் கண்
அருணீணிதி யுருவாம்பிர ணவநாயக னிருதாள்
மருணீங்கிட வருளோங்கிட வாழ்த்திப் பணிந்திடுவாம்.

(க) இந்திரன் பழிதீர்ந்தது - கலை - பூமிப் பரீட்சை.

புண்ணிய மூர்த்தி கரந்தலம் தீர்த்தம் புவியகத்துள்
நண்ணிய வோரிடம் தேடிந்திரன்பழி நாசமுற்றுக்
கண்ணிய னுகச்சென் மப்பகை தீர்ந் துலாங் காட்சிதந்த
தெண்ணிய நன்மை தருந்தாய் வாழ்கூடலெனுநகரே.

(உ) வெள்ளானை சாபந்தீர்ந்தது - கலை - கவுத்துகவாதம்

நகரம ராவதி நீங்கிக்காட் டானையெ னுத்திரிந்த
நிகரி லயிரா வதத்தின் கவுத்துக நீங்கியநற்
புகலிடம் சூலத்தாற் பொங்கி யெழுந்த புதுப்புனலிற்
றகதக வென்னப்பொற் றுமரைபூத்தவெந் தாய்நகரே.

(௩) திருநகரங்கண்டது - கலை - சிற்பம்

நகராங் கடம்ப வனத்தினிடைத் தெய்வ நாயகனுர்
பகவனை யட்ட கெஜவிமா னத்திற் பணிந்திடுநற்
றகவும் வழுதிக் கிறைசித் தராய்க் காட்சி தந்தமித
முகித்து மதுரை எனச்சிற்பித் தஃதம்மை யூரதுவே.

(ச) திருவவதாரம் - கலை - ஆகருசனம்

ஊருல கத்திற் சிறந்த மதுரையிலுன்னதருள்
நேருந் தவஞ்செய்ய ராஜயோ கங்கிட்டு நீமகவாய்ச்
சாருவை யென்பதைக் காஞ்சனை யின்பாற் றடாதகையாய்ச்
சேருந் தகவாக் கருசன வாழ்வு தெரிவுக்குமே.

Koviloor Digital Library

(௫) திருமணம் - கலை - வசியம்

தெரிய லணிராஜ ராஜேஸ் வரியாய்த் திசைசெயித்தும்
எரிவிழி யோன்முன் னெதிர்ந்துந் தனமுன் றிரண்டதுவா
மரிவை யாய் ஈசனைச் சுந்தரனுக்கி யரசளித்தும்
பிரிவை மணங்கொண் டதுகற்புக் கற்கவோ பெண் குலமே.

(௬) வெள்ளியம்பலர்க் கூத்து - கலை - நாடகம்

குலவு துவாதசாந் தத்தலத் தாளுகை கொண்டுபொருள்
நிலவ வெண்டிக்கும் விரிபூவை யாய்மணம் நீபொருந்தி
யுலவுதல் காணும் பலன்காட்ட வோபாம் பொடுபுலிக்கால்
வலமுநி முன்வெள்ளி மன்று ளிறைநட மாடுவதே.

(௭) குண்டோதரனுக்கு அன்னமிட்டது - கலை -

நடமாட வாடண்ட ரண்ட புவனத் தவர்களுமுண்
டிடவு மடிசி லமிதமாய்ப் பூரித் திருந்துநட்டம்
படல்கண் டிலேசகக் குண்ட வுதரப் பசியினட்டத்
தடல் காண வாக்கி யழித்து விளையாடு மாடலென்னே.

(௮) அன்னக்குழியும் வைகையும் அழைத்தது - கலை - தருமசாத்திரம்

எந்நோ யினுங்கொடி தாய பசிநோ யிலாதகற்ற
அன்னக் குழியொடு வைகையுங் குண்டோத ரற்களித்த
தென்ன விரேசகம் பூரகங் கும்பகத் திற் செயலற்
றென்றப் பெரும்பூதம் தம்பித்தல் காட்டு முயரறமோ.

(௯) கடலழைத்தது - கலை - உச்சாரனம்

அறத்தின் வடிவன்னை யேபொன் மலர்மாலை யாயவணன்
றுறவேழ் கடலுந் துவாதசாந் தத்தலத் தொன்றிநிலை
பெறநற் குளமா யமையவுச் சாரனம் பேசியது
சிறப்பா யரனுன் குறிப்பை நிறைவேற்று சீலமதோ.

Koviloor Digital Library

(௰) மலையத்து வசனை யழைத்தது - கலை - ஆகாயப்பிரவேசம்

சீலத் தெழுகட லாடிநோற் றுன்னைத் தெரிசனஞ்செய்
ஞாலத் தவர்சிவ சாரூப மெய்திடல் நாட்டுதற்கோ
காலஞ் செல்லான மலையத்துவசனற் காஞ்சனமா
மாலையுடன் செல்ல வான்வழி யாயேற்றி வைத்ததுவே.

(௰௧) உக்கிர பாண்டியன் திருவவதாரம் - கலை - சோதிடம்

ஏற்றி வைத்திட்ட சுடராங் குலவிளக் கென்ன வென்றுந்
தோற்றிச் சிவகோத் திரமுல கத்திற் றுலங்குதற்கோ
மாற்றலர்க் குக்கிர னும்வீர பாண்டிய மைந்தனைத்தந்
தாற்ற லளித்தெதிர் கால நலனும் அறிவித்ததே.

(௰௨) வேல்வளை செண்டு கொடுத்தது - கலை - சாமுத்திரிகம்

அறிவித் ததுகட லிந்திரன் மாமேரு வாம் பகையை
முறிவிக்க வேல்வளை செண்டு கொடுத்து முழுநலமுஞ்
செறியுநற் சாமுத் திரிக வடிவிற் சிறந்தபெண்ணை
யறியும் படிகொண்ட தம்மை நீ காட்டு மநுசரிப்போ.

(௰௩) கடல்சுவற வேல்விட்டது - கலை - பைபீலவாதம்

அநுசரி யாதுக் கிரப்பேர் வழுதியன் ஆள்நகர்மேல்
தநுநய னத்தோன் சலதியை யேவச் சலதியட
வுணுமாறு வேலேவப் பாய்பில வோத முறவுறிஞ் சிற்
றெனுமாறு நின்றது சத்தியுன் நாம மியைபடையே.

(௰௪) இந்திரன் முடிமேல் வளை எறிந்தது - கலை -ஆகாயகவனம்

படைவேற் கரத்தனுகாய கவனத்திற் பாய்ந்து செலு
மடைவு முலத்தி லிரவிமதியொன்ற லாய கும்பத்
தடைந்திந் திரன்றரும் ஆரம் பொறுத்து மீண்டன்னவன்
போர்க் குடைய முடிசிதைந் தோட வளை
தொட்டதுன்னருளே.

Koviloor Digital Library

(௰ரு) மேருவைச் செண்டால் அடித்தது - கலை - கனகபரீட்சை

அருள்சேர் துவாதசாந் தத்தல மேன்மை யடையவரும்
பொருட்பேறு வேண்டித் தலங்கள் கடந்து போய்ப்
பொன்மலையின்
செருக்குக் குலையத்தன் செண்டா லடித்துச் செழும்
பொருள் கொண்
டிருப்பிற்கு மச்ச மிட் டீண் டெய் தியதம்மை இன்னருளே.

(௰சா) மாபாதகந் தீர்த்தது - கலை - இதிகாசம்

இன்னு செயுமெய் வாய்கண்மூக் கொடுசெவி
யென்னுமைவாய்
தன்னுற் கள்பொய்மை களவுகொலைசூ தளிக்குமத்தி
மன்னுது தீர்த்தந்தொண் டையம்ஆ வூட்டல் வலம்வருதல்
என்னு விதிகாசந் தந்த தரனுன் பாலேய் நலமோ.

(௰எ) விறகு விற்றது - கலை - வீணை

நலங்கொள் துரியா திதம்பத மாயிந் தனஞ்சிரத்திற்
றுலங்கத் தசவித நாதமுந் தண்டினிற் றேற்றிநிற்கக்
கலங்கி எமநாத னேடப்பா ணர்க்காளாங் கானவனுய்
வலங்கொ ளரன் வீணை வாசித்த தம்மையுன் வான்புகழே.

(௰அ) திருமுகங் கொடுத்தது - கலை - இலிகிதம்

புகழிசை யாழ்ப்பாண பத்திரன் சேரன்பாற் பொன்பெறநற்
பகவன் எழுவாய் வயணெல்லை செய்யற் படுபொருளா
இகலுந் திருமுகமீயல் அறத்தா றெலாமியங்குஞ்
சகத்தில் லவாடலிகித இயல்காட்டு தன்மையதோ.

(௰கூ) பலகை இட்டது - கலை - சத்தப்பிரமம்

தன்மையில் வேற்றுமை யாயொற் றுமையுடைத்
தாயவைந்திரன்
பன்மை கடந்தவன் சத்தம் பிரமமாம் பாணியெனும்
உன்மெய்நா தாந்தத்திற் சொக்கியோ
தன்மையினுன்னதயாழ்
வன்மை கெடாமற் பலகைபாணர்க் கிட்ட வாறதுவே.

Koviloor Digital Library

(உ௰) சங்கப்பலகைக் கொடுத்தது - கலி - அக்கர இலக்கணம்

ஆறது வாகத் திரிபத மஃகியை பாந்தலத்தி
லூறது நேரலா வேழ்மையி லேழ்மை யுறுகலிகள்
வேறதி லாம லுருவாய்க் கடைச்சங்கம் வீற்றிருந்து
தேறப் பலகை சிவனீந்த தம்மை திருநகரே.

(உ௰௧) தருமிக்குப் பொற்கிழி யளித்தது - கலி - மதனசாத்திரம்

திருநகரச் செண்பக மாறன் மதனூற் றேர் தருபாத்
தருமிக் களித்துப் பொருள்பெற ஈசன் றரவதற்கும்
பொருட் குற்றம் கீரன் புகன்றுபூம் பொய்கையிற் புக்கழுந்த
நெருப்புக் கண் காட்டலுன் கூந்தற்குங் குற்ற நிகழ்த்தியதே.

(உ௰௨) கீரனைக் கரையேற்றியது - கலி - மதுரபாடனம்

நிகழ்ந்தமை கண்டு மதுரமொழியால் நெகிழ்ந்துருகிப்
புகழ்ந்து மதுரேசனைப்புல வோரெலாம் போற்றியசெய
மகிழ்ந்தெதிர் வந்தருட் கண்சாற்றிக் கீரன்வாய்
வாழ்த்திசைப்ப
இகழ்ந்த பொறுத்துக் கரையேற்றி யதம்மை இன்னருளே.

(உ௰௩)

அருள்நற் றமிழினி லக்கணங் கீரற் ககத்தியனூர்
பொருள்சேரக் கற்பித்து நற்கீரனுக்கிப் புலமையளித்
திருள்நீக் கிடுத லகத்தி னியமாமீ ராறுகலிப்
பொருள்கண் டவரே புலவரெனக் காட்டு பொற்பதுவே.

(உ௰௪) இடைக் காடன் பிணக்குத் தீர்ந்தது - கலி கட்கத்தம்பம்

பொற்பது வாமம்மை யப்பன்சொல் லோடு பொருளுருவாய்
நிற்பவன் கற்கொத்துத் தம்பம் போற் பாண்டிய னென்கவியை
அற்பமாய் நிந்தித்தா னென்றிடைக் காட னகன்று பொழு
தெற்படச் செல்லப்பின் சென்றதிசைக் கீயு மேற்றமதே.

Koviloor Digital Library

(உ௰௫) விருத்த குமார பாலரானது - கலை - வியாகரணம்

ஏற்றம் எதிர்மறை வாழ்வில் மணத்திலியைந் தவன்முன்
தோற்றி விருத்த குமாரராய்ப் பாலைச் சொரூப முமாய்
மாற்று வியாக ரணராகிக் கௌரி வடிவவள் கொள்
தேற்றங் கொடுத்தது பெண்குலத் தேவுண்மை
தேர்வதற்கோ.

(உ௰௬) வலை வீசியது - கலை - வாயுத்தம்பம்

தேரும் வளிநிலை யேயெழு தாக்கேள்வி செப்புகலை
நேருங் கலகத்திற் காதார மாமதா நீள்புலைமை
சேரும் எனல்மீள நோக்கிநீ யாகச் சினந்தசிவ
னரும் வலைவீசு வாணகி வந்த வதுசொலுமே.

(உ௰௭) சங்கத்தார் கலகந்தீர்த்தது - கலை - வாக்குத்தம்பம்

சொல்லினில் வல்ல புலவோர் கலகத் தொடக் கறுக்க
வல்லவ னாக வுருத்திரனாற் சென்மம் வாய்த்து வந்த
செல்லக் குமரனும் வாக்குத் தம்பங் கொண்டு செப்பியது
நல்ல மறைவாக்கிற் கெட்டாத தென்ன நவில்வதற்கோ.

(உ௰௮)

நவிலற் கரிதாய் மறைமீள மேற்கீழ் நணுக வொண
விவிதந் தராநிற்க நாடி வலைகொண் டுவீசியதைப்
புவியிற் கொணர்ந்து நின்நோக்காற் சிவமாம் புனிதமுற்றத்
துவிதம் அருளிய துத்தரகோசந் துலங்குதற்கோ.

(உ௰௯) வேதத்திற்குப் பொருளருளிச் செய்தது - கலை - வேதம்

உத்தர கோசமாய் மங்கை யுனக்கே யுரைத்தமறை
வித்தை யறியாது வேதப்பொருளைவிரித்தருளெம்
அத்தா எனக்கேட்க லிங்காகா ரத்திலமைந்து நின்ற
சித்தராய்ச் சொக்க ருணர்த்திய துந்தன்றிருவுருவோ.

Koviloor Digital Library

(௬௰) அட்டமாசித்தியுபதேசித்தது - கலை - கணிதம்

உன்றன் றிருவுரு வேற்று கணிதத்தி னுண்டாகிடும்
என்றட்ட மாசித்தி வேண்டு மறுவருக் கீசனருள்
கின்றனர் கல்லாக்கப் பட்ட மங்கை யென்றிருந்தவத்தி
னின்றதைப் பெற்றார்க ளென்றுலகீ தீசன்சொல்நின்புகழே.

(௬௰௧) எல்லாம் வல்ல சித்தரானது - கலை - தாதுவாதம்
கல்லானைக்குக் கரும்பருத்தியது -கலை -முட்டி

நின்புகழ்க் கூடலிற் றுதுவா தங்க ணிகழ்த்தியபின்
அன்பு ருவாஞ்சிவன் எல்லாமும் வல்லசித் தாய்வழுதி
முன்பு கல்லானை கரும்பருந்தல் காட்டி முட்டிகொளல்
உன்புகழ் காட்டு நலமோ கயற் கண்ணுமையவளே.

(௬௰௨) இரசவாதஞ் செய்தது - கலை - இரசவாதம்

உமையவ ணீவாலை யாக அரன்சித் துருவமெடுத்
திமையோர் துதிப்பக் கலையறுபத்துநா லென்பதெல்லாம்
அமையும் விளையாட லாடினர் பொன்னனை யாளுடைமை
தமையெலாம் பொன்னுக் கியதுசிவ சொத்த தாமெனவோ.

(௬௰௩) வாதவூரடிகட் குபதேசித்தது - கலை - யோக சாத்திரம்

சிவசொத்த தாமென வாதவூராளி திரவியங்கள்
அவளவுடனுட லாவி தனதாக வாக்கியவன்
சிவயோக சித்திபெறச்செய் செயலைச் செகமறியத்
தவயோக வம்பிகை யுன்னருளாற் சிவன்சாதித்ததே.

(௬௰௪) நரி பரியாக்கியது - கலை - அஸ்வ பரீட்சை

சாதித்த தென்னநரி பரியாகவும் தாமவற்றை
வேதித்த நாயகனுக்கும் வாதவூர் வித்தகர்க்குப்
போதித்த வுண்மை வெளிப்படக் காட்டப்புரவலன்மா
ஏதித்தனை யெனக் கொண்டதுன் மாயை இயற்கையன்றோ.

Koviloor Digital Library

உ
சிவமயம்

(௫௰௫) பரிநரியாக்கியது - கலி - மாயந்தரு சாலம்

அன்று மணிவாச கனுர் தகுதி யறிதலின்றி
நன்று பரியெனக் கொள்ளப் பரிகள் நரியதுவாய்க்
கொன்று முன்புள்ள குதிரையையும் பின்னர் கூக்கூரலிட்
டொன்று மிலாதோடக் கண்டதார் சாலமோ வுத்தமியே.

(௫௰௬) பிட்டுக்கு மண்சுமந்தது - கலி - ரதபரீட்சை

உத்தமரு ள்ளங் கலங்க நதிசீற்ற முற்றெழும்பும்
அத்தனும் பிட்டுக்கு மண்சுமந் துண்பா னரசனின்கோல்
கைத்தலம் பற்றும் பிரம்பா யடிதருங் காண்மினெனச்
சத்திய வல்லமை காட்டிய தார்சொல் தயாபரியே.

(௫௰௭) யானை எய்தது - கலி - கஜபரீட்சை

பரியபே ரோங்க வுருவெடுத் தென்னப் பயங்கரமாம்
பெரிய வுருவீந் தமணரே வானை பிதிர்ந்து விழ
வுரிய கணைதொடுத் தட்டாலை மண்டபத் துற்றசிவன்
புரியற் புதச்சத்தி சித்தியாய் நின்றதார் பூங்கொடியே.

(௫௰௮) மாணிக்கம் விற்றது - கலி - ரத்தின பரீட்சை

கொடியதா யாதிகள் செய்யப கார்க் கொடுமை யினுல்
முடிபுனைதற்காம் மணிக்குத் தயங்க முழுதுமதன்
படிப்படி யாம நலமுந்தந் தபிஷேக பாண்டியனுய்ச்
சுடிகை யளித்த வருள்வழித் தோன்றல் துலங்குதற்கோ.

(௫௰௯) பழியஞ்சியது - கலி -

துலங்காக் கொலைப்பழிக் கஞ்சிமுடிவு சொலத் தயங்கு
நிலங்கா வலனுக்குத் தேவரகசிய நீதியதைக்
கலங்கா மற்காட்டி யரச தருமத்தைக் காத்தருளல்
அலங்கார ராஜரா ஜேஸ்வரீ யுன்றன் அருட்பெருக்கே.

Koviloor Digital Library

5/1

உ
சிவமயம்

(௬0) வருணன்விட்ட கடலைவற்றச் செய்தது - கலை - காப்பியம்

பெருக்காய் வருணன் மதுரைமே லேவுபெருங்கடலைச்
சுருக்காய்க் கவளீகரஞ் செய்து கப்பித் தொலைத்துவிட்ட
கருக்கொண்டல் நான்கு மிறைவன் சடையிற் கரந்துறைந்தாங்
கிருக்கும் விதமென் னமிர்த வுருவமா மீச்வரியே.

(௬௧) நான்மாடக் கூடலானது - கலை - வைத்தியம்

ஈச்வரி நான்மாடக் கூடலாய் மேகம் எழுந்திணைந்து
மாய்ச்சலுறப் பேய்மழையைத் தடுத்து வருணனுக்கும்
நோய்ச்சங் கடத்தை யொழித்த திறைவன் னுகர்ந்தவிடந்
தீயச்சலுறநீ யமிதமாய்ப் பாங்குற்ற சேடமதோ.

(௬௨) நாகமெய்தது - கலை - காருடம்

சேட னெனத்தீ விடங்கொப்புளிக்கச் சினந்துமுனைந்
தாட லுடன்வரு நாகம் பிளக்கவெய் தாங்கதனுற்
கூடற் பதியிற் பரவும் விடத்தைக் குலைத்தழிகா
ரோடப் புனற்சத்தியாய் வந்த தாரோ சொல்லுத்தமியே.

(௬௩) இசை வாது வென்றது - கலை - மல்யுத்தம்

உத்தமி யோடிசை வாதிட்ட வள்தோல்வி யுற்றுவெற்றி
வித்தகி யைத்தான் சுமக்கத் தடுமாற்றம் வேந்துசொல
வைத்ததார் நாதநா தாந்த வடிவமாய் வாக்கினின்று
பத்தர்கட் கெல்லா நலமுந்தருங் கூடற் பைங்கிளியே.

(௬௪) இலிங்கமுங் கிணறும் வன்னி யுமழைத்தது - கலை - கன்னற்றம்பம்

கிளிமொழி மாதுநல் லாளுக் கிலிங்கங் கிணறுவன்னி
விளிவொழிந் தன்று மணங் கொண்டபோது போல்
மீண்டு வந்துன்
றளியுளிக் கன்னற் றம்பித்திடு சாட்சி தமிழ்விரக
மிளிரொளிச் சம்பந்தன் வாக்கை மெய்ப்பிக்கவோ மீனவளே.

Koviloor Digital Library

(சயரு) ஆலவாயானது - கலை - மிருத்தங்கம்

மீனவன் முன்மிருத் தங்கனுய் ஊழியை வென்றுநின்ற
தான துவாதசாந் தத்தல நாடியி தாமெனப்பாம்
பானதைக் கொண்டாலவாயா யரன் காட்டலம் பிகைநின்
ருனமாங் குண்டலிசத்தி நிலைகாட்டு சான்றதுவோ.

(சயசா) பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்தது - கலை -
சகுணசாத்திரம்

சான்ரோரிகழ் தீச்செயல்சார் குணத்தினுற் ருழ்வுறுநாள்
மூன்ரோ டிறை தாழ்ந்துயர் கதி காட்டு முறைமை யதோ
ஆன்ரோரிகழ் சேயீராறும் பன்றிப்பிறப் பாயலையத்
தான் ரேன்றித் தாய்க்கோல மாய்முலை யூட்டிடுந் தன்மையதே.

(சயஎ)

தன்மைப் புலத்திய ஞற்றடு மாற்றந் தரல் தவிர்த்துப்
புன்மை வராகம் வரையக மாகப் புறந்திரிந்த
மென்மைக் குருளை பனிரெண்டு ழைஞராய் மேவவரன்
நன்மைப் பரகாய மீந்ததென் னேவிஞ்சை நாயகியே.

(சயஅ) மாமனுகி வந்து வழக்குரைத்தது - கலை -
காண்தருவாதம்

நாயகி யோடுகா ணுப்போன தாய்மாமனுகி வந்து
பாயமாய் வஞ்சித் தவர் களெல்லோரும் பயப்படப்பஞ்
சாயத்திற் காண்தரு வாதத் துறமுறை சாற்றியது
ஞாயமுன் சந்நிதியிற் சொல்லிக் கேட்ட நலமதுவோ.

(சயகூ) வளையல் விற்றது - கலை - மோகனம்

நலமுண ராற்கேக நாயக நாயகி ஞானவுருத்
துலங்குநல் யோகி யரியர புத்திரத் தோன்ற லெனக்
கலக்க மறக் காட்டிக் கூடலிற் பெண்கட்குஞ் கைவளையி
லலங்காரத் தாற்கருக் கொள்ளச்செய் மோகனமார் செயலோ.

Koviloor Digital Library

(ருப) சுந்தரப் பேரம் பெய்தது - கலை - அத்திரவித்தை

செயலற வொன்றொரு பத்துநூ றுயிரஞ் சேகரமா
யயல்நின்ற சேனை படச்சுந் தரப் பெயரம்பு விட்டுக்
கயற்கொடி வேந்துய்ய வத்திர வித்தையைக் காட்டியதன்
வயணமென் னன்னவ ரேகம் பரல்லவோ மாதுமையே.

(ருயக) வரகுணனுக்குச் சிவலோகங் காட்டியது - கலை - தாளம்

உமையே இருதாள் எனுங்கலை கூடலுற விடையி
னமையு மிடைமரு தாய வழித்த் தமிழ்ந்தெழுந்த
சமைய மசபைத் தலஞ்சிவ லோகம தாய்ப் பவமாஞ்
சுமைமைக் கழித்தல் வரகுணற் கீசன் றுலக்கினரே.

(ருயஉ) அங்கம் வெட்டியது - கலை - அதிருச் செயம்

துலங்கறம் உன்னுரு வஃதா லறம்பிழை சூழ்ந்தவர்கள்
கலங்கவன் றேதெய்வஞ்சீறு மதற்கொரு காலமில்லை
உலங்கண மென்ற திருக் செய மாய்ச் சித்த ரேடெதிர்த்து
வலங்கொ ளவனங்கம் வெட்டி யரன் வாளால்
மாய்த்தனரே.

(ருயங) மாயப் பசுவை வதைத்தது - கலை - சுக்கிலத்தம்பம்

மாய்த்திடக் கூடல்மேல் வஞ்சர்கள் ஏவவரும் பசுவைச்
சாய்த்திட நந்தியை ஏவிய துண்மை யாந்தன் மவுரு
வாய்த்திடச் சொக்கலிற் றம்பமாய்ப் பொய்மை
மறையுமென்ப
தாய்த்திடங் காட்டலோ தன்மவுரு வாந் தயாநிதியே.

(ருயச) மெய்க் காட்டிட்டது - கலை - இன்திரசாலம்

நிதி கொள்ளை கொள்ளையாய் நல்லற மார்க்கத்தினோர் படுத்து
மதிமந் திரியின் பொய் மெய்யாகக் காட்ட மகிபதியி
னெதிர் சேனை வெள்ளம் வரத் தெய்வஞ் செய்ய வெதி ரியவன்
விதி பொன்றிடலென்ன வின்திர சாலமோ மீனவளே.

Koviloor Digital Library

உ
சிவமயம்

(ருயரு) உலவாக் கிழியருளியது - கலை - அட்சயம்

மீனவனுக்கற வோர்கள் பெருமை விரித் தனந்தந்
தானந் தருமஞ் செயவுல வாக் கிழிதந்த தெலாம்
ஆனந்த நல்லறச் செல்வீ யறத்தின் அளப்பரிய
தான வலிமையோ டட்சயமுங் காட்டரன்செயலோ.

(ருயசா) உலவாக் கோட்டை யருளியது - கலை - வித்துவேடனம்

அரன்செயலேசெய வென்றடி யார்கட் கமுதளித்து
வரசெல்வங் குன்றி விளைவும் வளன்களும் மாறுபட
நிரந்தரமா யறத்திற் குலவாக் கோட்டை நெல்லளித்தா
தரம்செய்யும் வித்வே டனச்சிறப் பார்செய லம்பிகையே.

(ருயஎ) கால்மாறியாடியது - கலை - நிருத்தம்

அம்பிகை நீவாழ் துவாத சாந்தத் தினடல் நிருத்த
சம்பவங் கால்மாறிக் காணுங் கலையுணர்ந் தார்க்கனந்த
அம்பலம் வெள்ளிய தாகு மிறை யாட்டலுப் பொழிந்து
தம்பிக்கு மென்பதா லிஃதம்பிகா யோக சாதனமோ.

(ருயஅ) சோழனை மடுவில் வீட்டியது - கலை - திருட்டித் தம்பம்

சாதனை யாற்றிருக் குத்தம்பம் கொள்ளச் சரந் துரந்த
நாதனைக் காண திரவிமதி கூடல் நாடுகையில்
வேதனை தீரக் களிற்றன் குழியில் விழுந் தெழுமாச்
சூதனை யாழ்த்தியது வாசி வித்தை செய் சூக்குமமோ.

(ருயகூ) விடை இலச்சினையிட்டது - கலை - சலத்தம்பம்

சூக்கும காரணத் தோன்றலைக் கண்டு தொழத் தனியே
வாக்குப்படி வந்த சோழற்கு வைகை மறுகுறுநீர்ப்
போக்குத் தம்பிக்க வழைத்துத் தரிசனம் பூர்த்திசெய
வாக்கிய சித்தரிலச்சினை யிட்டஃ தறவடிவே.

Koviloor Digital Library

உ

சிவமயம்

(௬ய) தண்ணீர் பந்தல் வைத்தது - கலை - சங்க்ராம இலக்கணம்

வடிவேல் மறவர் பெருந் தானை யோடு வழுதியுட
னெடிய வமருக் கெழச் சங்கிராமமாய் நேரியனின்
கொடிய படைபடப் பாண்டியன் றானை குளிர் புனலுண்
டடித்துச் செயிக்க நீர்ப் பந்தலளித்த தறன்வலியே.

(௬யக) கரிக்குருவிக்குப தேசஞ் செய்தது - கலை - மந்திரசாத்திரம்

வலிதொவ் வொரு காலு டையைந்து பட்சியும் வந்தெதிர்க்க
நலியுங் கயவாய் வழிபாடு கண்டு நயந்தவினம்
வலியனாய் வாழ மிருத்தஞ்சு மந்த்ர மளித் ததனின்
கலிநீக்கி யதன்னை யங்கயற் கண்ணி கடைக்கணிப்பே.

(௬யஉ) நாரைக்கு முத்தி கொடுத்தது - கலை - குழல் (வேணு)

களிபாங் குழலோசை போல்நீர் ஒழுக்கியல் காட்டிடு மீன்
அணிமையிற் கண்டுணு நாரைக்கு முத்தி யளித் தழியாப்
பிணியாம் பசிக்குப் புள் பொற் பூக்குள மீன் பெறு தருகப்
பணியென்றும் பெற்றது மீளநோக்கம்மை நின் பார்வையதே.

(௬யங) பாண்டியன் வெப்புத் தீர்த்தது - கலை - அவத்தைப் பிரயோகம்

பார்வையிற் கண்டு முட்டுக் கேட்டு முட்டென்ற
பாண்டியன்மெய்
தேர்விற் கவத்தைப் பிரயோக மாயேவு தீயவெப்புத்
தீர்வி லமணர் கெடமடைப் பள்ளித் திருநீறதால்
பேர் பாதி பாதியாய்ச் சம்பந்தர் தீர்த்ததுன் பேரருளே.

(௬யச) சமணரைக் கழுவேற்றியது - கலை - அக்கினித் தம்பம்

அருட்டிரு நீறினல் ஞானசம்பந்த ரகிலமெலாம்
இரு டீர்க்கத் தீராவெண் ணாயிரவர் கழுவேறி நிற்கும்
பொருட்டக் கினித்தம்பங் கொண்டதமிழ் புனற்
போக்குவெல்ல
அருட்டியது மீன நோக்கி திருவிளையாடலதே.

Koviloor Digital Library

சிவமயம்

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

நூற்பயன்

ஆடலறு பத்து நாலுங் கலை ஞானமாயுரைத்த
பாடல் பயில்பவர் நாத்திக வாதப்பகை யறுத்துக்
கூடற் பதி மீன நோக்கி யருளாற் குவலயத்துட்
டேடற் கருஞ் செல்வ மெல்லாமும் பெற்றுத் திகழ்பவரே.

அரி ஓம் நன்ருக குரு வாழ்க குருவே துணை

கலையறு பத்து நான்கை
மலையறு மாறு காட்ட
தொலைவறு மைங்கை யும்பல்
நிலைபெறு முள்ள நின்றே.

நாடொறு நாடொறு நச்சத்திரமாய்த்
திதிபெறு மதனுன் மதியெனும் யாக்கை

யாக்கை யதனில் ஆருதார
மும்மண்டலமா முடற்சக்கரமும்
இருபத்தேழோ டெண்ணிரண்டாக
நவிலுங் கோண நாற்பதின் மூன்ருய்
நிலவ யாக்கை நிலவாய் நிலவும்
நிலவு முடலுயிர் நிலையாய் நிற்ப
தொரு பன்னிரண்டும் ஒன்பது மாய
சரந்திரம் உபயஞ் சார்தரு கோளோடு
இலக்கு இனன் கலை யிருபத் தொன்று
ஒன்றி யுயிர்க்கலை யொரு பன்னிரண்டுள்
நின்றுயிர் மெய்யாய் நிலைபெறக்காட்டும்
ஐந்து மூன்று மொன் ருயவொன்பதும்
இயைவுற் றக்கரம் இருபத்தொன்ருய்
அண்டபிண் டத்திலமைந் தவாறு
கோண நாற்பத்து மூன் ருனதுள் நிற்கும்
நிற்பதனேடு நிலைப்பதுங் கூட
அறுபத்து நான்கா யமைவ காண்க

Koviloor Digital Library

சிவமயம்

காண்க வென்னக் காட்டிய விவைகள்
இரவி மதி கலை இரண்டே என்றும்
அவை நாற்பத்து மூன்றதிலிருபத்தொன்
றுக நடஞ்செய் யறுபதினுன் காய்
வரையறை பெற்று வழங்கு மென்பதே
வரையறை பெற்று வழங்குங் கோணமும்
எழுத்தும் இதின்மிக் கில்லை யிதின்வரும்
எட்டெட்டாங் கலை யின்னின் னவையென
அண்டபிண்டத் தமைந் த வாறு
வழுவா மரபின் வகுத்துக்காட்டுதும்.



Koviloor Digital Library

உ

சிவமயம்

அரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை

கலை நிர்ணய காரண விளக்கம்

கலையறு பத்து நான் காய்
நிலையுறு முற்ற தோத
மலைவறு தீர்க்க நல்குஞ்
சிலையெழு தாதி தேவே.

கலைகள் நிர்ணய காரண விளக்கம்
அண்ட பிண்டத் தமைந் தவாறு
முதற் பொருள் வைத்த முறையிற் காட்டுதும் (க)

நாடொறும் நாடொறும் நச்சத்திரமாய்
வளர்ந்து தேயு மதி யெனியாக்கை
யதிற் கலை திகழும் ஆறு தார
மும்மண்டல மாமுடற் சக்கரத்தின்
கோண நாற் பத்துமூன் றுன வாறு
கலையின் விளக்கம் காட்டி மேலும்
உடலில் உயிர்என ஒன்றி நிற்கும்
ஒருபன் னிரண்டும் ஒன்பதும் ஆய
இலக்கு இனன்கலை இருபத் தொன்றும்
ஆயக லைகள் அறுபானுன் கஃ
தின்னின் னவையென்றிசைப் போங்காண்க (உ)

அச்வ பரீட்சை யட்டாங்க யோகம்
வீணுகான மிவைக டரலால்
பரிவாசி யாழ்எனப் படு மச்சுவதி (௩)

தருமம் நீதி சாத்திரம் நட்டம்
ஆயகலைகள் அளித்தலாற் சோறு
தருமநாள் பூதமாய்ச் சாற்றுவர் பரணியை (ச)

காப்பியம் என்னும் கலைதருங் கார்த்திகை
அளக்கர் எனும் பெயர் அமைந்து காணும் (ரு)

ஆகாய பிரவேசம் அமைந்து காணும்
விமானப் பெயரே விளங்கும் ரோகிணி (சா)

திருட்டித் தம்பம் செய்யல் பூமிப்
பரிட்சைக் கலையைப் பலிக்கச் செயுமீன்
மார்கழியோடு மருகற் சீரிடப்பேர் (எ)

அத்திரவித்தை சத்தப் பிரமம்
சொக்கலிற் றம்பமாய்ச் சொல்லுங் கலைகள்
அளித்தலால் ஈசனுள் யாழ்முதிரை யெனத்
திருவாதிரைப் பெயர் செப்பலுற்றுது (அ)

இதிகாசக்கலை எய்தத் தரலால்
புனிதப் பெயர்தரும் புனர் நற்பூசம் (கூ)

அலங்காரக்கலை அமையத் தரலால்
குருவின் நாட் பெயர் கொள்ளும் பூசம் (ய)

மிருத்தங் கக்கலை விளங்கரவப் பேர்
அமையக் கொள்ளும் ஆயிலியமீன் (யக)

ஆகரு டணக் கலை யளிக்கும் நலத்தால்
வேள்விப் பெயர்கொடு விளங் குவமகநாள் (யஉ)

பூரோத்தரமாய்ப் புகலும் வாக்குத்
தம்பக்கலையைத் தருவ தம்மீன் (யங)

அவத்தைப் பிரயோக்கலை கவுத்துகக்
கலைகஜ பரிட்சைக் கலையிவை யுதவலான்
அங்கிசார்ந்தநா ளென்றும் கவுத்துகம்
களிற தென்றுங் காணும் அஸ்தப் பெயர் (யச)

சாமுத் திரிகம் தரலாற் றுவட்டா
என்று சித்திரைக் கியம்பும் நாமம் (யரு)

தெருண் டெதிர் நிற்கும் தெரிவை என்ன
சலத்தம் பந்தரு தன்மை யளித்தலால்
மறக்கா அல்என வாயுத்தம்பம்
ஆற்றுதல் தரலாற் காற்றின் நாள் எனச்
சுவாதி மீன்பெயர் சொல்லலுற்றது (யசா)

Koviloor Digital Library

கட்கத் தம்பக் கலையைத் தரலால்
மித்திர நாள்என விளம்புவதனுடம் (௰௭)

ஆகாய கவனம் ஏகுதல் வேதை
யாம்ரச வாதம் அக்கினித் தம்பம்
இவைதர லால்இந் திரநாள் வேதி
எரியெனக் கேட்டைக் கியம்புவ நாமம் (௰௮)

வேணு கானவிசை நீரொழுக்கியல்
காணுங் குருகெனக் கழறுவ மூலம் (௰௯)

உச்சா ரணம்நீர் உதித்தெழப் பூர்ந்து
ஆட லாற்பூ ராடப் பேர்பெறும் (௨௰)

இந்திர சால மியைய வளித்தலால்
கடைநீர்க் குளமெனக் காணுநாமம்
உடைத்தாய் நிற்கும் உத்திராடமீன் (௨௰௧)

சுற்றி வளைக்குந் தொழிலாம் மாயந்
தருசா லக்கலைக் குறுந்திரு வோணம் (௨௰௨)

மந்திரத் துழநி வழங்கு மதனுற்
புன்மை தீர்ந்த புள்ள தெனவும்
அக்கர இலக்கணத் தாவணி எனவும்
கன்னற் றம்பங் காட்டு மதுவாம்
அவ்விடத் தீட்டத் தவிட்டம் பேர்பெறும் (௨௰௩)

மற்போர் கனக மமைவு பெறிச்சை
வண்ண மியற்று வைத்திய மிவைகள்
அளித்த லாற்போர் அடிபடு குன்று
வருண நாட்பேர் வழங்குவ சதயம் (௨௰௪)

காண்தரு விவிதக் கலைபர காயப்
பிரவேசக் கலைபெறத் தருமதனுல்
பூரும் அட்டை யாம்பூ ரட்டையும்
பூரும் அட்டாதியாய்ப் புகலும் பேர்பெறும் (௨௰௫)

பிற்கொளுங் கால் எனப் பேசுநிருத்தம்
தருங்கலை உத்தரத் தாதிப் பேர்கொளும் (௨௰௬)

Koviloor Digital Library

சோதிடக்கலை யோத வுதவலால்
இரவி நாள்என் றிரேவதிக்குப் பெயர் (உ௰எ)

மேய்யிட முட்டிகொள் மேடம் முட்டி
பாய்பில இடபம் பாய்பில வாதம்
மைதுன மிதுனம் மதன சாத்திரம்
கற்கட கங்கொள் கவைத்தாள் தாளம்
வெய்ய வியாக்கிரம் வியாகரணக்கலை
வாழ்செயற் கன்னி வசீகரணக்கலை
நிறுத்துக் கணிக்கும் நிறைகோல் கணிதம்
வேதை செய்யும் விருட்சிகம் வேதம்
அடுசயங் கொள்தனு அட்சய வித்தை
அதிர்ச்செய மகரம் அதுஅ திருச்சயம்
விளைக்குங் கும்பம் வித்து வேடனம்
தலைகால் புரியாதடர்மீன் மோகனம்
இராசிக்கலைகளிவை பன்னிரண்டு (உ௰அ)

காரோடச் செய் கதிர்காரோடம்
இரவில் மிளிர்பிறை இயைவுநாடகம்
இனிய செவ்வாய் இரதம் பெறிச்சை
தூதுவனும் புதன்சொற் பெறுலிகிதம்
தமனிய ஞரியல் தாதுவாதம்
சிதவிரசிதம் சிற்பநற்கலை
சனியீச் சுரனுர் சகுனச் சாத்திரம்
இராகிற் குரிய திரத்தினம் பெறிச்சை
மணியொளிக் கேது மதுரபாடனம்
இவையொன்பது கோட்கியன்ற கலைகள் (உ௰கூ)

பொற்று மரைமலர் பூத்தெண்டிசையும்
விரிந்து பரிமளம் வீசிமதுர
மதியி னமித மலியுங் கூடல்
ஆலவாயா யக்கி னமையும்
மூலத் தலத்தின் முழுதாங் கலைகள்
அறுபத்து நான்கே யான வாறு
எட்டெட் டாயக்கலை இசைக்கப் பெற்றது (௩௰)

Koviloor Digital Library

உ

சிவமயம்

இயக்காயவர்க்கம்

எண்	உறுப்பு	கட்டளைத்திறங்கள்
௧	முடி	அராகம்
௨	உச்சி	விளரி
௩	நெற்றி	குறுங்கலி
௪	புருவம்	படுமலைப்பாலை
௫	கண்இமை	படு
௬	கண்	திறனில் திறம்
௭	மூக்கு	நைவளம்
௮	செவி	மெய்திறம்
௯	கன்னம்	பஞ்சுரம்
௰	உதடு	நவில்
௰௧	பல்	மருள்
௰௨	நாவு	பாடு
௰௩	மோவாய்	நேர்தல்
௰௪	தொண்டைக்குழி	மலை
௰௫	பின்தாரை	செம்பாலை
௰௬	மூக்குதண்டு	காந்தாரம்
௰௭	நெஞ்சுக்குழி	ஆசான்
௰௮	வயிறு	இயையாமை
௰௯	கொப்பூள்	அயிர்ப்பு
௨௰	இடை	நேர்மை
௨௰௧	குறி	பெயல்
௨௰௨	குதம்	உறுப்பு
௨௰௩	புயம்	பியந்தை
௨௰௪	குடங்கை	செம்மை
௨௰௫	அங்கை	அரும்பாலை
௨௰௬	விரல்	குறிஞ்சி
௨௰௭	கடங்கை	ஆற்றுதிறம்
௨௰௮	புட்டம்	சாதாரி
௨௰௯	தொடை	செவ்வழிப்பாலை
௩௰	கணைக்கால்	விளரிப்பாலை
௩௰௧	கால்விரல்	மேர்செம்பாலை
௩௰௨	பாதம்	கோடிபாலை

Koviloor Digital Library

உ

சிவமயம்

கரண இலக்கணம் - சூத்திரங்கள்

முதலும் நடுவும் முடிவிலா ஈறும்
ஆன எழுத்து உ அன்றென நின்று
நாம ரூபம் ஆம்அது கடந்த
தன்மை எழுத்தாய்ச் சமைவு கொண்ட
விளக்கம் உடைத்தாம் இலக்கணம் - ககரம் (க)

ஏற்றம் இறக்கம் எய்தும் கால்நடப்
பண்டிய தால்ர அண்டென மொழிய
இடம்வல மாக இயையுரு வெழுத்தாய்
அமையுமி லக்க மாகும் உகரம் (உ)

சரந்திர மாய்ச்சஞ் சரித்துத் திரியும்
திரியைத் திரிபற செய்ய இம்என
ஊன்ற வாம்மூன் றெருலியும் உருவில்
சரந்திரம் உபயத் தன்மை காட்டும்
வடிவெழுத் திலக்கமாகும் - ந - (ந)

உ அன்ரும் என நின்ற வொன்றின்
தன்மை எழுத்துத் தன்னியல் தீர்ந்து
புறவெளி நோக்கிப் புறப்புற மாக
நடுநிலை இன்மையால் நாஅல் எனும்பெயர்
எழுத்தாய்க் குறிக்கொள் ளிலக்கம் - ச - (ச)

வெளியின் சுழற்சியும் வளியாம் காலின்
உருவமுங் கொண்ட ஒன்ரும் ர்உ
தலைப்பட நிற்றலால் நிலைப்படும் ஐஎன
அருவுந விலக்கமாய் அமை - ரு - (ரு)

ஏகியேகியஞ் சிடையின மான
அஞ்சுரு வந்தீர்ந்து ஆவினை யுற்றதால்
ஆறு என்று கூறும் ஒலியும்
அஞ்சு நிலமும் மிஞ்சிக் கடந்து
கதிகொள் சாகாக் காலின் உருவும்
அதுசென் றேகா தடங்கும் ஒன்றின்
வடிவின் இலக்கமும் ஆகும் - சா - (சா)

Koviloor Digital Library

நாத வுயிரஃ தான வேகாத்
தலைச்சஞ் சரிகம் தருநல் லொலியும்
உயிரணு வொன்ற வொலிக்கும் நாதமும்
காலும் எழுத்தாய்க் கலந்திசை கொண்ட
வொன்றும் எகர வுருவாம் - எ - (எ)

ஆறலை கொண்டே ழாநின் றடர்ந்து
புகாற தடங்கப் போகாப் புனலாய்
எட்ட நிற்கு மியல்பாம் ஒலியும்
அது அ அரவ ஆர மாகையால்
அகர வுருவிலக் காகும் - அ - (அ)

முதன்மை பெற்று முன்னின் றெல்லை
யறியா தான வவலந் தீர
உ அன்றும் எனநின்ற வொன்றும்
பதியுருத் தாங்கியொன் பதுவென மொழிய
நெருப்பா றெதிரில் நின்றிடு மெழுகென
உருகுந் தொண்டர் உருவம் உடையஃ
தான இலக்கம் ஆகும் - கூ - (கூ)

பதியக் கொண்டும் பதிந்து நின்றும்
விளங்கிப் பதிற்றென விள்ளும் ஒலியும்
பாசு பதமாய்ப் பகரும் உருவும்
அமைய மயிர்ப்பால் ஆம்என நிற்கும்
இயல்பைக் கொண்ட இலக்கம் - ம - (ம)

KOVILOOR ANDAVAR
A. No. 46361
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்
அரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முத்தமிழ் வேதத் திருச்சபை 27 (உ௭) ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வெளியிட்ட **"கலை ஞானம்"** நூலைப்பற்றி

உலகம் உய்ய இறைவன் திருவிளையாடலை பரஞ்சோதி முனிவர் திருவிளையாற் புராணமாக்கித் தந்தார். உலகம் ஒளிமயமாக எப்பொழுதும் மக்களுக்கு இருந்து மன இருளைப் போக்க எம் ஞானத் தெளிவு குருநாதர் திருவிளையாடற் புராணத்தில் உள்ள சூக்குமத்தை "கலை ஞானம்" என்றதலைப்பில் நூலாக்கி 64 (௬௪) கலைகள் என்ன என்பதையும், நட்சத்திரங்களுக்குரிய கலைகள் 43 (௪௩) என்றும் இராசிகளுக்கு 12 (௧௨) என்றும் கோள் ஒன்பதற்கும் 9 (௯) என்றும், ஆக ஆயகலைகள் அறுபத்து நான்கையும் துவாத சாந்தத் தலமாகிய திருஆலவாய் என்னும் மதுரையில் இறைவன் விளையாடியதற்கு காரணமும் தந்து பூலோக சிவலோகம் மதுரை எனத் தெளிவுபடுத்தி இருக்கிறார். ஞானியர்கள் போற்றி வழிபடும் நாற்பத்து முக்கோணத்தின் தலைவி மீனாட்சியின் அருள்நோக்கை கருணை கூர்ந்து நமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். இந்நூலை வாசிப்பவர்கள் வாழ்க்கையில் நமக்குரிய கலை எது என தேர்ந்தெடுத்து சிறப்பாக மன அமைதியுடன் வாழலாம். உலகம் தான் நாம் என்பதையும் நாம் தான் உலகம் என்பதையும் நம்முன் அம்மை அப்பன் விளையாடுவதையும் எளிமையாக அண்ட பிண்டத்தின் அமைப்பைக் காட்டி விளக்குகிறார். உறுதியாக இறைவன் உண்டு என்றநம்பிக்கை மனதில் ஏற்பட்டு மீனாட்சியின் அருளால் வாசி மனதைக்கூட மனம் உயிரைக் கூட உயிர் பிரமத்தை கூட கூட்டுவிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என எழுதி நிறைவு செய்கிறோம்.

இவண்
இராம. ஆதிரெத்தினம்
பிசு. இசக்கியப்பன்
சிவ. கார்த்திக்
இணைச் செயலாளர்கள்